


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் தமிழ்நாடு நீடிக்கக்கூடிய கடல் வளங்கள் மற்றும் நீலப் பொருளாதார திட்டத்தின் கீழ் பிச்சாவரத்தில் 26.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் அலையாத்தி பாதுகாப்பு மையம், தமிழ்நாடு கடல் வளங்கள் மற்றும் நீலப் பொருளாதாரம் (TNSHORE) திட்டத்தின் கீழ் மரக்காணத்தில் 50.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச பறவைகள் மையம், 'நீலகிரி வரையாடு திட்டத்தின்' கீழ் கோயம்புத்தூர் மாவட்டம், காந்திபுரத்தில் நீலகிரி வரையாடு பாதுகாப்பு மையம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில், சமூகநீதி அடிப்படையில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கினை மேலும் அதிகரிக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், ஐந்து ஆண்டுகளில் ஒரு இலட்சம் மகளிரை தொழில்முனைவோராக உயர்த்திடும் வகையில் தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தை (Tamil Nadu Women Entrepreneur Empowerment Scheme TWEES) தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு மானியத்தொகைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல. நிர்மல் ராஜ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் 9 கோடியே 31 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டுமானத் தொழிலாளர்களுக்காக சென்னை, மதுரை, கோயம்புத்தூர் உட்பட 23 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள உழைப்பாளர் நலக்கூடங்கள், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் காஞ்சிபுரம் மாவட்டம் எழிச்சூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் தையூரில் உள்ள தங்குமிடங்களில் 66 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள முதியோர் இல்லங்கள், 6 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள செய்யாறு அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கான புதிய கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, 27 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 3 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சி.வி.கணேசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நினைவில் வாழும் தமிழறிஞர் வே.ஆனைமுத்து அவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கம் செய்யப்பட்டு அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத்தொகை 20 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சட்டமன்ற உறுப்பினர் முகம்மது ஷா நவாஸ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஒளவை அருள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 500 நூல்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, மார்ச். 6–

இந்து சமய அறநிலையத்துறை பதிப்பகப் பிரிவின் மூலம் புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 500 ஆன்மிக நூல்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.03.2026 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் பதிப்பகப் பிரிவின் சார்பில் நான்காம் கட்டமாக புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 500 ஆன்மிக நூல்களை வெளியிட்டார்.

இந்து சமய அறநிலையத்துறையானது தொன்மை வாய்ந்த திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளோடு சமய நெறிகளை பரப்பிடும் வகையில் அரிய ஆன்மிக நூல்களை மறுபதிப்பு செய்து புதுப்பொலிவுடன் நூலாக்கம் செய்திடும் பணிகளையும் செவ்வனே மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் பதிப்பகப் பிரிவு தொடங்கப்பட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் முதற்கட்டமாக 19.01.2023 அன்று தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருப்பாவை, திருவெம்பாவை. அபிராமி அந்தாதி, நாலாயிர திவ்யபிரபந்தம், பதினெண் புராணங்கள் உள்ளிட்ட அரிய 108 ஆன்மிக நூல்களும், இரண்டாம் கட்டமாக 27.02.2024 அன்று தலவரலாறு, தலபுராணங்கள், நாட்டுடைமையாக்கப்பட்ட பக்தி இலக்கியங்கள் உள்ளிட்ட அரிய 108 ஆன்மிக நூல்களும், மூன்றாம் கட்டமாக 15.04.2025 அன்று புராணக் கதை நூல்கள், இதிகாச நூல்கள், அடியார் புலவர் வரலாற்று நூல்கள், கோயில் கலை வரலாற்று நூல்கள் உள்ளிட்ட 300 ஆன்மிக நூல்களும் என மொத்தம் அரிய 516 ஆன்மிக நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டன.

2025–2026 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற மானியக் கோரிக்கையில், "இந்து சமய அறநிலையத்துறை சார்பாக நடத்தப்படும் பதிப்பகப்பிரிவின் மூலம் இதுவரை 516 அரிய ஆன்மிக நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாண்டும் ஆன்மிக நூல்கள், சமய நூல்கள், கையடக்கச் சிற்றேடுகள், இறைத்துதிப் பாடல்கள், பாராயணப் புத்தகங்கள், வழிகாட்டிக் கையேடுகள் உட்பட 500 அரிய நூல்கள் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், பதிப்பகப் பிரிவின் மூலம் நான்காம் கட்டமாக, மறுபதிப்பே இல்லாமல் இருந்த தொன்மையான அரிய புராணங்கள், திருமுறைகள், பிரபந்தங்கள், போற்றிப் பாடல்கள், சைவ, வைணவ ஆய்வு நூல்கள், முக்கிய திருக்கோயில்களின் கல்வெட்டுத் தரவுகளுடன் கூடிய நூல்கள், தலவரலாறு, கிராமப்புற தெய்வங்களின் வரலாறுகளுடன் பாராயணப் பாடல்கள் மற்றும் வழிபாட்டுப் பாடல்கள் என புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 500 ஆன்மிக நூல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

எங்கும் கிடைக்கப்பெறாமல் இருந்த அரிய 1,016 ஆன்மிக நூல்களை மறுபதிப்பு செய்து வெளியிட்டதன் மூலம் நமது பண்பாடு, கலாச்சாரம் மற்றும் கலை நுட்பங்களை அடுத்த தலைமுறையினர் அறிந்து கொள்ள வழிவகை செய்ததோடு, சமய நெறிகளை பாதுகாக்கும் காலப் பெட்டகமாக திகழும் இந்நூல்களை ஆவணப்படுத்திய பெருமை இவ்வரசையே சாரும். அதோடு மட்டுமல்லாமல் இந்நூல்கள் அனைவருக்கும் கிடைத்திடும் வகையில், ஆணையர் அலுவலகம் மற்றும் 203 திருக்கோயில்களில் புத்தக விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர். கூடுதல் ஆணையர்கள் முனைவர் துரை. இரவிச்சந்திரன் திருமதி சி.ஹரிப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் சென்னை, தரமணி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில் 39 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று படப்பிடிப்புத் தளங்கள் கொண்ட திரைப்பட படைப்பாக்க வளாகத்தை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஒளவை அருள், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் டிராட்ஸ்கி மருது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் 100 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் பல்நோக்கு கடற்பாசி உற்பத்தி பூங்கா, மேம்படுத்தப்பட்ட மீன்பிடி துறைமுகம், மீன் இறங்குதளம், புதிதாக அமைக்கப்பட்டுள்ள வண்ண மீன் சில்லரை விற்பனையகம், ஒருங்கிணைந்த பயிற்சி மையம் மற்றும் காலநிலைக்கு ஏற்றவாறு வளப்படுத்தப்பட்டுள்ள மூன்று கடலோர மீனவ கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் என 8 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, செங்கல்பட்டு, தஞ்சாவூர், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் 665 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 13 திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீனவர் நலவாரிய தலைவர் முனைவர் அ.ஜோசப் ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இயக்குநர் முனைவர் கே.வி.முரளிதரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 4.03.2026 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் பதிப்பகப் பிரிவின் சார்பில் நான்காம் கட்டமாக புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட அரிய 500 ஆன்மிக நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் முனைவர் துரை. இரவிச்சந்திரன் திருமதி சி.ஹரிப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் ஆக்கங்களை எளிய தமிழில் மக்கள் பதிப்பாக மொழிபெயர்த்து மூன்றாம் கட்டமாக 73 தொகுதிகளை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஒளவை அருள், வல்லுநர் குழு உறுப்பினர்கள் புலவர் செந்தலை ந. கவுதமன், பேராசிரியர் வீ. அரசு, முனைவர் மு. வளர்மதி, அ.மதிவாணன், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தைச் சேர்ந்த சிவக்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இன்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தென்காசி வருகை

# தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் உற்சாகமான வரவேற்பு!

## தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிக்கை!

*தென்காசி.மார்ச்.6-*

*துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (06-03-2026 வெள்ளிக்கிழமை) காலையில் தென்காசி வருகையையொட்டி தென்காசி தெற்கு மாவட்டம் சார்பில் 7 இடங்களில் எல்.இ.டி. மேடையும்,15 இடங்களில் கலை நிகழ்ச்சியுடன் கூடிய மேடையும் வரவேற்பு மேடைகளும்,சாலையின் இருபுறமும் கழக இருவண்ண கொடிகளும் அமைக்கப்பட்டு வெகு சிறப்பான உற்சாகமான வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.கழகத்தினர் அலைகடலென திரண்டு வந்து கலந்து கொள்ள வேண்டும்.என தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*



*துணை முதல்வர் அவர்கள் தென்காசியில் இன்று (06-03-2026 வெள்ளிக்கிழமை) நடைபெறும் அரசு நிகழ்வுகளில் பங்கேற்று பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்கள்.*

*முன்னதாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஏற்பாட்டில் சிறப்பான, மிகவும் உற்சாகமான வரவேற்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 7 இடங்களில் எல்.இ.டி. மேடைகளும்,15 இடங்களில் கலை நிகழ்ச்சியுடன் கூடிய மேடைகளும் அமைக்கப்பட்டுள்ளது.*

*தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, மாநில கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் என 5000 க்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டு உற்சாகமான வரவேற்பு அளிக்கின்றனர்.*

*மேலும் தென்காசியில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வுகளிலும் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும்.*

*இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்து கேட்டுக் கொண்டுள்ளார்.*